Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 24/2023

## Deposition of P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | சிவா |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | சிக்கப்பட்டி |
| Religion | : | இந்து |
| Age | : | **36/2023** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.12.2023**
( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

**முதல்விசாரணை**

நான் சிக்கப்பட்டியில் வசித்து டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் **3** ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் காலை **7.00** மணியளவில் ஆலங்குடியிலிருந்து எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது சிக்கப்பட்டி பாலம் அருகே வடகாடு போலிசார் நின்று எங்கள் ஊரை சேர்ந்த ஒரு நபருக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பார்வையிட்டு படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அங்கு தயார் செய்து பார்வை மகஜர் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் நாகராஜன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்ட பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

போலிசார் விசாரணையில் நான் ஆலங்குடியிலிருந்து என் வீட்டிற்கு சென்ற விவரத்தை சொல்லியுள்ளேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்பதை படித்துப்பார்க்கவில்லை. விபத்தில் இறந்துபோனவர் எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை